புதுச்சேரி அரசு
போக்குவரத்துத் துறை

எண்: 3774/போ.து/டி.பி-4/2016 தேதி : 24/05/2016

## செய்திக் குறிப்பு

### கல்வி நிறுவன வாகனங்களை ஆய்வு செய்ய சிறப்பு முகாம்
### புதுச்சேரி போக்குவரத்துத் துறை நடவடிக்கை

மாணவ, மாணவியரின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டும், மோட்டார் வாகன சட்டம் மற்றும் உச்ச நீதிமன்றம் வகுத்துள்ள நெறிமுறைகளை தீவிரமாக அமல்படுத்தும் நோக்கிலும் புதுச்சேரி பகுதிக்குட்பட்ட கல்வி நிறுவனங்களின் வாகனங்களை ஆய்வு செய்ய சிறப்பு முகாம் வரும் 28.05.2016 முதல் 04.06.2016 வரை, புதுச்சேரி மேட்டுப்பாளையம் சரக்கூர்தி முனையத்தில் (டிரக் டெர்மினல்) நடத்தப்பட உள்ளது.

சிறப்பு ஆய்வு முகாமிற்கு, அனைத்து கல்வி நிறுவனங்களைச் சார்ந்த மொத்தம் 862 வாகனங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட இருக்கின்றன. இதற்கென போக்குவரத்துத் துறையில் வாகன ஆய்வாளர்கள் / உதவி வாகன ஆய்வாளர்கள் தலைமையில் 10 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிறப்பு ஆய்வில் கலந்து கொண்ட வாகனங்களுக்கு ஆய்வு செய்யப்பட்டதின் அடையாளமாக ஸ்டிக்கர்கள் ஒட்டப்படும். இது போன்ற சிறப்பு ஆய்வு காரைக்கால், மாஹி மற்றும் ஏனாம் பகுதியிலும் மேற்கொள்ளப்படும்.

அனைத்து கல்வி நிறுவனங்கள் மற்றும் வாகன உரிமையாளர்கள் மேற்குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் தங்கள் வாகனங்களை ஆய்விற்குட்படுத்தி மாணவ மாணவியரின் பாதுகாப்பு கருதி எடுக்கப்படும் போக்குவரத்துத்துறையின் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளி வாகனங்கள் ஆய்வினைத் தொடர்ந்து பள்ளிக் குழந்தைகளை ஏற்றிச் செல்லும் ஆட்டோக்கள் மற்றும் வேன்களுக்கும் சிறப்பு ஆய்வு முகாம் நடைபெறும்; அதற்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

GOVT OF PONDICHERRY ★ TRANSPORT DEPARTMENT ★

(எஸ்.டி. சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்
புதுச்சேரி